மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட விளம்பரங்கள் இப்பொழுது செய்யப்படவில்லை. சுற்றுலா இடங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய குறிப்பேடுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. போஸ்டர் முதலியவைகள் எல்லாம் அனுப்பப்படுகின்றன. சுற்றுலா சம்பந்தமாக நடைபெறுகின்ற பல்வேறான விழாக்களில், சுற்றுலா இடங்களைப்பற்றிய விளம்பரங்கள் போடப்படுகின்றன. இது விஷயத்தில் மத்திய அரசும் உதவி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, recently we saw in the papers that there was a move to have a rope-railway connecting Kodaikanal with Palni. May I know at what stage this move is?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு கருத்தை, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு விழாவில் கலந்துகொண்ட ஒருவர் கூறியதாக நானும் பார்த்தேன். பழநி கோவில் தேவஸ்தானம் கொடைக்கானலுக்கும் பழநிக்கும் இணைப்பு செய்ய முயற்சிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதுபற்றி சுற்றுலாத் துறைக்கு எந்த விவரமும் கிடைக்கவில்லை.

(பிற்பகல் 4-10)

Development of Tourism

*302 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRUVALARGAL G. SWAMINATHAN and S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the State Government have suggested to the Centre, to allow them to import small planes from Switzerland for the purpose of developing tourism in the State;

(b) if so, the number proposed to be imported; and

(c) their total value?

சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துதல்

திரு. எல். பலராமன் (திரு. ஜி; சுவாமிநாதன், திரு; எஸ்; வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த சுவிட்சர்லாந்திலிருந்து சிறு ரக விமானங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்படி மத்திய அரசிடம் மாநில அரசு கருத்துத் தெரிவித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், எத்தனை விமானங்கள் இறக்குமதி செய்யக் கருதப் பட்டுள்ளது ?

(உ) அவற்றின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினு எழவில்லை.

Request from the Chairman, Tourism Development Corporation

*303 Q.—THIRU ERA SAMBASIVAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any request has been received from the Chairman, Tourism Development Corporation to nationalise all taxis plying in the City of Madras; and

(b) the action proposed to be taken thereon?

சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து வேண்டுகோள்

திரு. இரா. சாம்பசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து சென்னை நகரில் டாக்சிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினு எழாது.

Resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association

*304 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association at their Conference held at Kanchipuram on 31st March 1973 have been brought to the notice of the Government;

(b) if so, the details of the resolutions; and

(c) the action proposed to be taken thereon?